# +2 Orientation program

காயல்பட்டணம் வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 9.10.2018 அன்று காலை 10:30 மணியளவில் +2 மாணவியரை எதிர்காலக் கல்விக்கு ஊக்கப்படுத்தும் 'தெளிந்து தேர்வு செய்' என்னும் நிகழ்ச்சி நடைபெற்றது. இரண்டாமாண்டு ஆங்கில இலக்கிய மாணவி M.S.ஆமினா ஃபர்ஹானா கிராத் ஓத, தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. கல்லூரி நிறுவனர் தலைவர் அல்ஹாஜ் வாவு S. செய்யது அப்துர் ரஹ்மான், கல்லூரிச் செயலர் வாவு M.M.மொகுதஸீம் B.A(CS), துனைச்செயலர் ஹாஜி ஹாபிஸ் வாவு S.A.R.அஹ்மது இஸ்ஹாக் ஆலிம் M.A., Azhari (Egypt), இயக்குநர் முனைவர் திருமதி மெர்சி ஹென்றி M.A.,Ph.D ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி R. C.வாசுகி M.A., Ph.D., DGT வரவேற்புரை வழங்கினார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் திருமதி இரா. அருணாஜோதி M.A., M.Phil., Ph.D., கல்லூரியின் வரலாறு, கட்டமைப்பு, துறைச் செயல்பாடுகள் ஆகியன குறித்து எடுத்துரைத்தார். கல்விசாரா பல்வேறு தொழில்சார் பயிற்சிகள் குறித்து அராபிக் துறைத் தலைவர் ஆலிமா திருமதி S.A.K.முத்து மொகுதும் பாத்திமா M.A., M.Phil., விளக்கவுரையாற்றினார். கல்விசார் இதர செயல்பாடுகள் பற்றி வணிக செயலாற்றியல் துறைத்தலைவர் திருமதி S.A.ரஹ்மத் ஆமினா பேகம் MBA., M.Phil., MBA உரை நிகழ்த்தினார்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த ஆறுமுகநேரி LIME நிறுவனரும் மனவியல் ரீதியான ஆலோசகருமான திரு.கனேஷ், மாணவியர் கல்வி கற்கும் பருவத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறை, நண்பர் மற்றும் உறவுகளைத் தேர்வு செய்தல், முடிவெடுப்பதில் மாணவியரின் பங்கு, தெளிவாக முடிவெடுத்தல் ஆகியன குறித்து தம் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். தொடர்ந்து கல்லூரிச் செயலர் வாவு M.M.மொகுதஸீம் B.A(CS), மாணவியரிடையே கல்லூரி குறித்துக் கலந்துரையாடினார். மாணவியரிடமிருந்து பின்னூட்டம் பெறப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் காயல்பட்டணத்திலுள்ள 5 கல்வி நிலையங்களில் பயிலும் 284,+2 மாணவியர் கலந்து பயன்பெற்றனர். வணிகவியல் துறைத் தலைவரும் மாணவப் பேரவை ஒருங்கிணைப்பாளருமான திருமதி L.R. சுபா M.Com., M.Phil., SET நன்றியுரை வழங்கினார். இரண்டாமாண்டு ஆங்கில இலக்கிய மாணவி M.T.ஷோகிலா நஃபிலா துஆ ஓதினார்.நாட்டுப் பண்ணுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.